LORDS TODAY - International Social Media & Magazine

LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Apr. 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Cwner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS





LORDS CLUBS INTERNATIONAL

# LORDS TODAY

BHAGAVAD GITA

BIBLE

KURAN


2021- 16796675754

www.lordsclubs.com

# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்


### தொடர் 3




**BHAGAVAD GITA-Tamil**

**6 Page's**


தொடரும்.....




**BIBLE Tamil**

**6 Page's**

தொடரும்.....




**KURAN Tamil**

**6 Page's**


தொடரும்.....




உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,

லார்ட்ஸ் மபால்ராஜ்


**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com




सीदन्ति मम गात्राणि मुखं च परिशुष्यति ।
वेपथुश्च शरीरे मे रोमहर्षश्च जायते ॥ २९ ॥

என் அவயவங்கள் சோர்கின்றன. என் வாய் உலர்கிறது. என்னுடம்பு நடுங்குகிறது. மயிர் சிலிர்க்கிறது. 29

गाण्डीवं स्रंसते हस्तात्त्वक्चैव परिदह्यते ।
न च शक्नोम्यवस्थातुं भ्रमतीव च मे मनः ॥३०॥


* காண்டீவம் கையிலிருந்து நழுவுகிறது. உடம்பில் எரிச்சலுண்டாகிறது. என்னால் நிற்க முடியவில்லை. என் மனம் சுழலுகிறது. 30

निमित्तानि च पश्यामि विपरीतानि केशव ।
न च श्रेयोऽनुपश्यामि हत्वा स्वजनमाहवे ॥३१॥

கேசவா, விபரீதமான சகுனங்களும் பல காண்கிறேன். போரிலே சுற்றத்தாரை மடிப்பதில் எனக்கு நன்மை தோன்றவில்லை. 31

---

* காண்டீவ மென்பது அர்ஜுனனுடைய வில்லின் பெயர்.





न काङ्क्षे विजयं कृष्ण
न च राज्यं सुखानि च ।
किं नो राज्येन गोविन्द
किं भोगैर्जीवितेन वा ॥ ३२ ॥

கண்ணா, நான் வெற்றியை விரும்புகிலேன்; ராஜ்யத்தையும், இன்பங்களையும் வேண்டுகிலேன். கோவிந்தா, நமக்கு ராஜ்யத்தால் ஆவதென்? இன்பங்களால் ஆவதென்? உயிர் வாழ்க்கையாலேனு மாவதென்னே? 32

येषामर्थे काङ्क्षितं नो
राज्यं भोगाः सुखानि च ।
त इमेऽवस्थिता युद्धे
प्राणांस्त्यक्त्वा धनानि च ॥ ३३ ॥

யாவர் பொருட்டு நாம் ராஜ்யத்தையும் போகங்களையும் இன்பங்களையும் விரும்புகிறோமோ, அவர்கள் உயிரையும் செல்வங்களையுந் துறந்தோராய் இங்கு வந்து நிற்கிறார்கள். 33




आचार्याः पितरः पुत्रा-
स्तथैव च पितामहाः ।
मातुलाः श्वशुराः पौत्राः
श्यालाः संबन्धिनस्तथा ॥ ३४ ॥


குருக்களும், தந்தையரும், மக்களும், பாட்டன்மாரும், மாதுலரும், மாமன்மாரும், பேரரும், மைத்துனரும், ஸம்பந்திகளும் (இங்குளர்.) 34

एतान्न हन्तुमिच्छामि घ्नतोऽपि मधुसूदन ।
अपि त्रैलोक्यराज्यस्य हेतोः किं नु महीकृते ॥

மதுஸூதனா, யான் கொல்லப்படினும் இவர்களைக் கொல்ல விரும்புகிலேன். மூவுலகின் ஆட்சி பெறுதற்கெனினும் (இது செய்யேன்.) பூமியின் பொருட்டுச் செய்வனோ? 35

निहत्य धार्तराष्ट्रान्नः का प्रीतिः स्याज्जनार्दन ।
पापमेवाश्रयेदस्मान्हत्वैतानाततायिनः ॥ ३६ ॥

ஜனார்தனா! திருதராஷ்ட்ரக் கூட்டத்தாரைக் கொன்று நாம் என்ன இன்பத்தை யடையப் போகிறோம்? இந்தப் பாதகரைக் கொல்வதனால் நம்மைப் பாவமே சாரும். 36




**तस्मान्नार्हा वयं हन्तुं धार्तराष्ट्रान्स्वबान्धवान् ।**
**स्वजनं हि कथं हत्वा सुखिनः स्याम माधव ॥**


ஆதலால், சுற்றத்தாராகிய திருதராஷ்ட்ர
வர்க்கத்தாரைக் கொல்வது நமக்குத் தகாது.
மாதவா, பந்துக்களைக் கொன்ற பின் நாம் இன்
புற்றிருப்ப தெப்படி? 37

**यद्यप्येते न पश्यन्ति लोभोपहतचेतसः ।**
**कुलक्षयकृतं दोषं मित्रद्रोहे च पातकम् ॥ ३८ ॥**

அவாவின் மிகுதியால் அறிவழிந்த இவர்கள்
குலத்தை யழிப்பதில் விளையும் தீங்கையும், நண்
பருக்குச் சதி செய்வதிலுள்ள பாதகத்தையும்
காண்கிலராயினும், 38

**कथं न ज्ञेयमस्माभिः पापादस्मान्निवर्तितुम् ।**
**कुलक्षयकृतं दोषं प्रपश्यद्भिर्जनार्दन ॥ ३९ ॥**

ஜனார்தன, குல நாசத்தால் ஏற்படுங் குற்
றத்தை யுணர்ந்த நாம் இப் பாவத்தினின்று
விலகும் வழி யறியாதிருப்பதென்னே? 39




कुलक्षये प्रणश्यन्ति कुलधर्माः सनातनाः ।
धर्मे नष्टे कुलं कृत्स्नमधर्मोऽभिभवत्युत ॥ ४० ॥


குல நாசத்தால் என்று முள்ள குலதர்மங்கள்
அழிகின்றன. தர்மம் அழிவதனால் குல முழு
தையும் அதர்மம் சூழ்கிறதன்றே? 40

अधर्माभिभवात्कृष्ण प्रदुष्यन्ति कुलस्त्रियः ।
स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः ॥ ४१ ॥

கண்ணா, அதர்மம் சூழ்வதனால் குலஸ்த்ரீகள்
கெட்டுப் போகிறார்கள். வ்ருஷ்ணி குலத்
தோன்றலே, மாதர் கெடுவதனால் வர்ணக்
குழப்ப முண்டாகிறது. 41

सङ्करो नरकायैव कुलघ्नानां कुलस्य च ।
पतन्ति पितरो ह्येषां लुप्तपिण्डोदकक्रियाः ॥४२॥

அக் குழப்பத்தால் குலத்தார்க்கும் அதனை
அழித்தார்க்கும் நரக மேற்படுகிறது. இவர்
களுடைய பிதிர்க்கள் பிண்டமும் நீரு மின்றி
வீழ்ச்சி பெறுகிறார்கள். 42






दोषैरेतैः कुलघ्नानां वर्णसङ्करकारकैः ।
उत्साद्यन्ते जातिधर्माः कुलधर्माश्च शाश्वताः ॥

வர்ணக் குழப்ப முண்டாகும்படி குலக் கேடர் செய்யும் இக் குற்றங்களால் ஜாதி தர்மங்களும் தொன்று தொட்டுள்ள குலதர்மங்களும் எடு பட்டுப் போகின்றன. 43

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ।
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥ ४४ ॥


ஜநார்தன, குலதர்மங்கள் எடுபட்டுப் போன மனிதருக்கு எக்காலும் நரகத்தில் வாஸ மென்று கேள்விப் படுகிறோம். 44

अहो बत महत्पापं कर्तुं व्यवसिता वयम् ।
यद्राज्यसुखलोभेन हन्तुं स्वजनमुद्यताः ॥ ४५ ॥

அந்தோ! அரச வின்பத்தை விழைந்து சுற்றத் தாரைக் கொல்ல முற்படும் நாம் பெரிய பாவஞ் செய்யத் தலைப்பட்டோம்! 45

தொடரும்.....

# BIBLE




## மெகா தொடர்

## தொடக்கநூல் அதிகாரம் – 5 – திருவிவிலியம்

1 ஆதாமின் வழிமரபின் அட்டவணை பின்வருமாறு; கடவுள் மனிதரைப் படைத்தபொழுது அவர்களைத் தம் சாயலில் உருவாக்கினார்.

2 ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். அவர்களைப் படைத்த நாளில் அவர்களுக்கு ஆசி வழங்கி, மனிதர் என்று பெயரிட்டார்.

3 ஆதாமுக்கு நூற்று முப்பது வயதானபோது, அவனுக்கு அவன் சாயலிலும் உருவிலும் மகன் ஒருவன் பிறந்தான்; அவனுக்குச் சேத்து என்று பெயரிட்டான்.

4 சேத்து பிறந்தபின் ஆதாம் எண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தான். ஆதாமுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

5 மொத்தம் தொள்ளாயிரத்து முப்பது ஆண்டுகள் வாழ்ந்தபின் ஆதாம் இறந்தான்.

6 சேத்துக்கு நூற்றைந்து வயதானபோது அவனுக்கு ஏனோசு பிறந்தான்.

7 ஏனோசு பிறந்தபின் சேத்து எண்ணூற்று ஏழு ஆண்டுகள் வாழ்ந்தான். சேத்துக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

8 மொத்தம் தொள்ளாயிரத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தபின் சேத்து இறந்தான்.

9 ஏனோசுக்குத் தொண்ணூறு வயதானபோது அவனுக்குக் கேனான் பிறந்தான்.

10 கேனான் பிறந்தபின் ஏனோசு எண்ணூற்றுப் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்தான். கேனானுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.


11 மொத்தம் தொள்ளாயிரத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தபின் ஏனோசு இறந்தான்.

12 கேனானுக்கு எழுபது வயதான போது, அவனுக்கு மகலலேல் பிறந்தான்.

13 மகலலேல் பிறந்த பின் கேனான் எண்ணூற்று நாற்பது ஆண்டுகள் வாழ்ந்தான். கேனானுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

14 மொத்தம் தொள்ளாயிரத்துப் பத்து ஆண்டுகள் வாழ்ந்த பின் கேனான் இறந்தான்.

# BIBLE




15 மகலலேலுக்கு அறுபத்தைந்து வயதானபோது, அவனுக்கு எரேது
பிறந்தான்.

16 எரேது பிறந்தபின் மகலலேல் எண்ணூற்று முப்பது ஆண்டுகள் வாழ்ந்தான்.
மகலலேலுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

17 மொத்தம் எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்த பின்
மகலலேல் இறந்தான்.

18 எரேதுக்கு நூற்று அறுபத்திரண்டு வயதானபோது, அவனுக்கு ஏனோக்கு
பிறந்தான்.

19 ஏனோக்கு பிறந்தபின் எரேது எண்ணூறு ஆண்டுகள் வாழ்ந்தான்.
எரேதுக்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

20 மொத்தம் தொள்ளாயிரத்து அறுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்த பின்
எரேது இறந்தான்.

21 ஏனோக்குக்கு அறுபத்தைந்து வயதானபோது, அவனுக்கு மெத்துசேலா
பிறந்தான்.

22 மெத்துசேலா பிறந்தபின், ஏனோக்கு முந்நூறு ஆண்டுகள் கடவுளோடு
நடந்தான். ஏனோக்கிற்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

23 ஏனோக்கு மொத்தம் முந்நூற்று அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்தான்.

24 ஏனோக்கு கடவுளோடு நடந்து கொண்டிருந்தான். பின்பு அவனைக்
காணவில்லை. ஏனெனில் கடவுள் அவனை எடுத்துக்கொண்டார்.

25 மெத்துசேலாவுக்கு நூற்று எண்பத்தேழு வயதானபோது அவனுக்கு
இலாமேக்கு பிறந்தான்.


26 இலாமேக்கு பிறந்தபின், மெத்துசேலா எழுநூற்று எண்பத்திரண்டு
ஆண்டுகள் வாழ்ந்தான். மெத்துசேலாவுக்குப் புதல்வரும் புதல்வியரும்
பிறந்தனர்.

27 மெத்துசேலா மொத்தம் தொள்ளாயிரத்து அறுபத்தொன்பது ஆண்டுகள்
வாழ்ந்தபின் இறந்தான்.

28 இலாமேக்கிற்கு நூற்று எண்பத்திரண்டு வயதானபோது, அவனுக்கு மகன்
ஒருவன் பிறந்தான்.

29 அவன் ஆண்டவரின் சாபத்திற்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான

# BIBLE




கடின வேலையிலும் உழைப்பிலும் நமக்கு ஆறுதல் அளிப்பான் என்று சொல்லி அவனுக்கு நோவா என்று பெயரிட்டான்.

30 நோவா பிறந்தபின் இலாமேக்கு ஐந்நூற்றுத்தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்தான். இலாமேக்கிற்குப் புதல்வரும் புதல்வியரும் பிறந்தனர்.

31 இலாமேக்கு மொத்தம் எழுநூற்று எழுபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்தபின் இறந்தான்.

32 நோவாவிற்கு ஐந்நூறு வயதானபோது, அவருக்குச் சேம், காம், எப்பேத்து ஆகியோர் பிறந்தனர்.

## தொடக்கநூல் அதிகாரம் – 6 – திருவிவிலியம்

1 மண்ணில் மனிதர் பெருகத் தொடங்கி, அவர்களுக்குப் புதல்வியர் பிறந்தபொழுது,

2 மனிதரின் புதல்வியர் அழகாக இருப்பதைத் தெய்வப் புதல்வர் கண்டு, தாங்கள் தேர்ந்து கொண்டவர்களையெல்லாம் மனைவியர் ஆக்கிக்கொண்டனர்.

3 அப்பொழுது ஆண்டவர், என் ஆவி தவறிழைக்கும் மனிதனில் என்றென்றும் தங்கப் போவதில்லை. அவன் வெறும் சதைதானே! இனி அவன் நூற்றிருபது ஆண்டுகளே வாழ்வான் என்றார்.


4 தெய்வப் புதல்வர் மனிதரின் புதல்வியருடன் சேர்ந்து அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்க, அக்காலத்திலும் அதற்குப் பின்னரும் மண்ணுலகில் அரக்கர் இருந்தனர். அவர்களே பெயர் பெற்ற பழங்காலப் பெருவீரர்கள் ஆவர்.

5 மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார்.

6 மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது.

7 அப்பொழுது ஆண்டவர், நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன். மனிதர்முதல் கால்நடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள்வரை அனைத்தையும் அழிப்பேன். ஏனெனில் இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன் என்றார்.

# BIBLE




8 ஆனால் நோவாவுக்கு ஆண்டவரின் அருள் பார்வை கிடைத்தது.

9 நோவானின் வழி மரபினர் இவர்களே; தம் காலத்தவருள் நோவா நேர்மையானவராகவும், குற்றமற்றவராகவும் இருந்தார். நோவா கடவுளோடு நடந்தார்.

10 நோவாவிற்கு சேம், காம், எப்பேத்து என்னும் மூன்று புதல்வர் பிறந்தனர்.

11 அப்பொழுது கடவுள் முன்னிலையில் மண்ணுலகு சீர்கெட்டிருந்தது, ப+வுலகு வன்முறையால் நிறைந்திருந்தது.

12 கடவுள் மண்ணுலகை உற்று நோக்கினார். இதோ! அது சீர்கெட்டுப் போயிருந்தது. மண்ணுலகில் ஒவ்வொருவரும் தீய வழியில் நடந்துவந்தனர்.

13 அப்பொழுது கடவுள் நோவாவிடம் பின்வருமாறு கூறினார்; எனது முன்னிலையிலிருந்து மனிதர் எல்லாரையும் ஒழித்துவிடப்போகிறேன். ஏனெனில், அவர்களால் மண்ணுலகில் வன்முறை நிறைந்திருக்கின்றது. இப்பொழுது நான் அவர்களை மண்ணுலகோடு அழிக்கப் போகிறேன்.

14 உனக்காகக் கோபர் மரத்தால் ஒரு பேழை செய்; அதில் அறைகள் அமைத்து அதற்கு உள்ளேயும் வெளியேயும் கீல் ப+சு.

15 பேழையை நீ செய்யவேண்டிய முறையாவது; நீளம் முந்நூறு முழம்; அகலம் ஐம்பது முழம்; உயரம் முப்பது முழம்.


16 பேழைக்குமேல் கூரை அமைத்து அந்தக் கூரை பேழைக்கு ஒரு முழம் வெளியே தாழ்வாக இருக்கும்படி கட்டி முடி; பேழையின் கதவை ஒரு பக்கத்தில் அமை. பேழையில் கீழ்த்தளம், நடுத்தளம், மேல்தளம் என மூன்று தளங்கள் அமை.

17 நானோ, வானுலகின்கீழ் உயிருள்ள எல்லாவற்றையும் அழிப்பதற்காக மண்ணுலகின் மேல் வெள்ளப்பெருக்கு வரச் செய்வேன். மண்ணுலகில் உள்ளவையெல்லாம் மடிந்துபோம்.

18 உன்னுடனோ, என் உடன்படிக்கையை நிலைநாட்டுவேன். உன் புதல்வர், உன் மனைவி, உன் புதல்வரின் மனைவியர் ஆகியோருடன் நீ பேழைக்குள் செல்.

19 உன்னுடன் உயிர் பிழைத்துக்கொள்ளுமாறு, சதையுள்ள எல்லா உயிரினங்களிலிருந்தும் வகைக்கு இரண்டைப் பேழைக்குள் கொண்டு வா. அவை ஆணும் பெண்ணுமாக இருக்கட்டும்.

# BIBLE




20 வகை வகையான பறவைகள், கால்நடைகள், நிலத்தில் ஊர்வன ஆகியவற்றிலிருந்து வகைக்கு இரண்டு உயிர் பிழைத்துக்கொள்ள உன்னிடம் வரட்டும்.

21 உண்பதற்கான எல்லா வகை உணவுப் பொருள்களையும் நீ எடுத்துச் சென்று சேர்த்து வைத்துக்கொள். அவை உனக்கும் அவற்றிற்கும் உணவாகட்டும்.

22 கடவுள் தமக்குக் கட்;டளையிட்டபடியே நோவா எல்லாவற்றையும் செய்து முடித்தார்.

## தொடக்கநூல் அதிகாரம் – 7 – திருவிவிலியம்

1 அப்பொழுது ஆண்டவர் நோவாவிற்குக் கூறியது; நீ உன் குடும்பத்தார் அனைவரோடும் பேழைக்குள் செல். ஏனெனில், இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையானவனாகக் காண்கிறேன்.

2 தக்க விலங்குகள் எல்லாவற்றிலிருந்தும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடிகளையும், தகாத விலங்குகளிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஒரு சோடியையும்.

3 வானத்துப் பறவைகளிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஏழு சோடிகளையும் மண்ணுலகெங்கும் அவற்றின் இனங்கள் உயிர் பிழைத்துக் கொள்வதற்காக உன்னுடன் சேர்த்துக் கொள்.

4 ஏனெனில் இன்னும் ஏழு நாள்களில் மண்ணுலகின்மேல் நாற்பது பகலும் நாற்பது இரவும் நான் மழை பெய்விக்கப்போகிறேன். நான் உருவாக்கிய உயிரினங்களை எல்லாம் இந்த நிலத்திலிருந்து அழித்தொழிப்பேன்.

5 ஆண்டவர் கட்டளையிட்டபடியே நோவா எல்லாவற்றையும் செய்தார்.

6 மண்ணுலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது நோவாவிற்கு வயது அறுநூறு.


7 வெள்ளப்பெருக்கிலிருந்து தப்புவதற்காக நோவா தம் புதல்வர், மனைவி, புதல்வரின் மனைவியர் ஆகியோருடன் பேழைக்குள் சென்றார்.

8 தக்க விலங்குகள், தகாத விலங்குகள், பறவைகள், நிலத்தில் ஊர்வன அனைத்தும்

9 சோடி சோடியாக, ஆணும் பெண்ணுமாக, நோவாவுடன் கடவுள் அவருக்குக் கட்டளையிட்டபடி பேழைக்குள் சென்றன.

10 ஏழு நாள்களுக்குப்பின் மண்ணுலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

# BIBLE




11 நோவாவின் வாழ்க்கையின் அறுநூறாம் ஆண்டின் இரண்டாம் மாதத்தில் பதினேழாம் நாளன்று பேராழத்தின் ஊற்றுகள் எல்லாம் பீறிட்டெழுந்தன. வானங்களின் மதகுகள் திறக்கப்பட்டன.

12 நாற்பது பகலும் நாற்பது இரவும் மண்ணுலகில் பெரு மழை பெய்தது.

13 நோவா தம் புதல்வர் சேம், காம், எப்பேத்து, தம் மனைவி, தம் புதல்வர் மூவரின் மனைவியர் ஆகியோருடன் அன்றே பேழைக்குள் நுழைந்தார்.

14 அவர்களும் அவர்களுடன் எல்லாவகைக் காட்டு விலங்குகளும், கால்நடைகளும், நிலத்தில் ஊர்வனவும், பறவைகளும், இறக்கைகளையுடைய யாவும்,

15 உயிருள்ள அனைத்தும் சோடி சோடியாக நோவாவிடம் பேழைக்குள் சென்றன.

16 கடவுள் அவருக்குக் கட்டளையிட்டபடி உள்ளே சென்றவை எல்லாம் ஒவ்வோர் உயிரினத்திலும் ஆணும் பெண்ணுமாக உள்ளே சென்றன. அதன் பின் ஆண்டவர் அவரை உள்ளே விட்டுக் கதவை மூடினார்.

17 நாற்பது நாள்களாகப் பெரு வெள்ளம் மண்ணுலகில் வந்து கொண்டிருந்தது. வெள்ளம் பெருக்கெடுத்துப் பேழையைத் தூக்க, அது நிலத்திலிருந்து உயர்ந்து எழுந்தது.

18 மண்ணுலகின் மேல் வெள்ளம் பாய்ந்து மிகுதியாகப் பெருக்கெடுக்க, பேழை நீரின்மேல் மிதந்தது.

19 மண்ணுலகில் வெள்ளம் பாய்ந்து பெருகப்பெருக வானத்தின்கீழ் எங்கும் இருந்த உயர்ந்த மலைகள் எல்லாம் நீரில் மூழ்கின.

20 மூழ்கிய மலைகளுக்குமேல் நீர் மட்டம் பதினைந்து முழம் உயர்ந்திருந்தது.

21 நிலத்தில் ஊர்வன, பறவைகள், கால்நடைகள், காட்டு விலங்குகள், நிலத்தில் தவழ்வன, மனிதர் அனைவர் ஆகிய சதையுள்ள உயிரினங்கள் அனைத்தும் மாண்டன.

22 தரையில் வாழ்ந்தவற்றில் நாசியால் மூச்சுவிடும் அனைத்தும் செத்துப் போயின.


23 மனிதர் முதல் விலங்குகள், ஊர்வன, வானத்துப் பறவைகள் ஈராக மண்ணில் உயிர் வாழ்ந்த அனைத்தும் அழிந்தன. அவை மண்ணுலகில் இராதபடி ஒழிக்கப்பட்டன. நோவாவும் அவருடன் பேழையில் இருந்தவர்களுமே எஞ்சியிருந்தனர்.

24 நூற்றைம்பது நாள்களாக மண்ணுலகில் வெள்ளம் பாய்ந்து பெருகிற்று.

தொடரும்.....

# KURAN

## மெகா தொடர்




நிச்சயமாக, அவன் தவ்பாவை ஏற்(று) மன்னிப்)பவனாகவும், பெருங் கருணையுடையோனாகவும் இருக்கிறான்.

2:55 وإذ قلتم يا موسى لن نؤمن لك حتى نرى الله جهرة فأخذتكم الصاعقة وأنتم تنظرون

2:55. இன்னும் (இதையும் நினைவு கூறுங்கள்) நீங்கள், "மூஸாவே! நாங்கள் அல்லாஹ்வை கண்கூடாக காணும் வரை உம்மீது நம்பிக்கை கொள்ள மாட்டோம்" என்று கூறினீர்கள்; அப்பொழுது, நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே உங்களை ஓர் இடி முழக்கம் பற்றிக்கொண்டது.

2:56 ثم بعثناكم من بعد موتكم لعلكم تشكرون


2:56. நீங்கள் நன்றியுடையோராய் இருக்கும் பொருட்டு, நீங்கள் இறந்தபின் உங்களை உயிர்ப்பித்து எழுப்பினோம்.

2:57 وظللنا عليكم الغمام وأنزلنا عليكم المن والسلوى كلوا من طيبات ما رزقناكم وما ظلمونا
ولكن كانوا أنفسهم يظلمون

2:57. இன்னும், உங்கள் மீது மேகம் நிழலிடச் செய்தோம்; மேலும் "மன்னு, ஸல்வா" (என்னும் மேன்மையான உணவுப் பொருள்களை) உங்களுக்காக இறக்கி வைத்து, "நாம் உங்களுக்கு அருளியுள்ள பரிசுத்தமான உணவுகளிலிருந்து புசியுங்கள்" (என்றோம்;) எனினும் அவர்கள் நமக்குத் தீங்கு செய்துவிடவில்லை; மாறாக, தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டார்கள்.

2:58 وإذ قلنا ادخلوا هذه القرية فكلوا منها حيث شئتم رغدا وادخلوا الباب سجدا وقولوا حطة نغفر لكم خطاياكم
وسنزيد المحسنين

2:58. இன்னும் (நினைவு கூறுங்கள்;) நாம் கூறினோம் "இந்த பட்டிணத்துள் நுழைந்து அங்கு நீங்கள்





விரும்பிய இடத்தில் தாராளமாகப் புசியுங்கள் அதன் வாயிலில் நுழையும் போது, பணிவுடன் தலைவணங்கி "ஹித்ததுன்" (-"எங்கள் பாபச் சுமைகள் நீங்கட்டும்") என்று கூறுங்கள்; நாம் உங்களுக்காக உங்கள் குற்றங்களை மன்னிப்போம்; மேலும் நன்மை செய்வோருக்கு அதிகமாகக் கொடுப்போம்.

2:59 فَبَدَّلَ الَّذِينَ ظَلَمُوا قَوْلًا غَيْرَ الَّذِي قِيلَ لَهُمْ فَأَنزَلْنَا عَلَى الَّذِينَ ظَلَمُوا رِجْزًا مِّنَ السَّمَاءِ
بِمَا كَانُوا يَفْسُقُونَ

2:59. ஆனால் அக்கிரமக்காரர்கள் தம்மிடம் கூறப்பட்ட வார்த்தையை அவர்களுக்குச் சொல்லப்படாத வேறு வார்த்தையாக மாற்றிக் கொண்டார்கள்; ஆகவே அக்கிரமங்கள் செய்தவர்கள் மீது - (இவ்வாறு அவர்கள்) பாவம் செய்து கொண்டிருந்த காரணத்தினால் வானத்திலிருந்து நாம் வேதனையை இறக்கிவைத்தோம்.

2:60 وَإِذِ اسْتَسْقَىٰ مُوسَىٰ لِقَوْمِهِ فَقُلْنَا اضْرِب بِّعَصَاكَ الْحَجَرَ ۖ فَانفَجَرَتْ مِنْهُ اثْنَتَا عَشْرَةَ عَيْنًا ۖ
قَدْ عَلِمَ كُلُّ أُنَاسٍ مَّشْرَبَهُمْ ۖ كُلُوا وَاشْرَبُوا مِن رِّزْقِ اللَّهِ وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ مُفْسِدِينَ

2:60. மூஸா தம் சமூகத்தாருக்காகத் தண்ணீர் வேண்டிப் பிரார்த்தித்த போது, "உமது கைத்தடியால் அப்பாறையில் அடிப்பீராக!" என நாம் கூறினோம்; அதிலிருந்து பன்னிரண்டு நீர் ஊற்றுக்கள் பொங்கியெழுந்தன. ஒவ்வொரு கூட்டத்தினரும் அவரவர் குடி நீர்த்துறையை நன்கு அறிந்து கொண்டனர்; "அல்லாஹ் அருளிய ஆகாரத்திலிருந்து உண்ணுங்கள், பருகுங்கள்; பூமியில் குழப்பஞ்செய்து கொண்டு திரியாதீர்கள்" (என நாம் கூறினோம்) என்பதையும் நினைவு கூறுங்கள்.




2:61 وَإِذْ قُلْتُمْ يَا مُوسَىٰ لَن نَّصْبِرَ عَلَىٰ طَعَامٍ وَاحِدٍ فَادْعُ لَنَا رَبَّكَ يُخْرِجْ لَنَا مِمَّا تُنبِتُ الْأَرْضُ مِن بَقْلِهَا وَقِثَّائِهَا وَفُومِهَا وَعَدَسِهَا وَبَصَلِهَا ۖ قَالَ أَتَسْتَبْدِلُونَ الَّذِي هُوَ أَدْنَىٰ بِالَّذِي هُوَ خَيْرٌ ۚ اهْبِطُوا مِصْرًا فَإِنَّ لَكُم مَّا سَأَلْتُمْ ۗ وَضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ وَالْمَسْكَنَةُ وَبَاءُوا بِغَضَبٍ مِّنَ اللَّهِ ۗ ذَٰلِكَ بِأَنَّهُمْ كَانُوا يَكْفُرُونَ بِآيَاتِ اللَّهِ وَيَقْتُلُونَ النَّبِيِّينَ بِغَيْرِ الْحَقِّ ۗ ذَٰلِكَ بِمَا عَصَوا وَّكَانُوا يَعْتَدُونَ

2:61. இன்னும், “மூஸாவே! ஒரே விதமான உணவை நாங்கள் சகிக்க மாட்டோம், ஆதலால், பூமி விளைவிக்கும் அதன் கீரையையும், அதன் வெள்ளரிக்காயையும், அதன் கோதுமையையும், அதன் பருப்பையும், அதன் வெங்காயத்தையும் எங்களுக்கு வெளிப்படுத்தித்தருமாறு உன் இறைவனிடம் எங்களுக்காகக்கேளும்” என்று நீங்கள் கூற, “நல்லதாக எது இருக்கிறதோ, அதற்கு பதிலாக மிகத்தாழ்வானதை நீங்கள் மாற்றிக் கொள்(ள நாடு)கிறீர்களா? நீங்கள் ஏதேனும் ஒரு பட்டணத்தில் இறங்கி விடுங்கள்; அங்கு நீங்கள் கேட்பது நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும்” என்று அவர் கூறினார். வறுமையும் இழிவும் அவர்கள் மீது சாட்டப்பட்டு விட்டன; மேலும் அல்லாஹ்வின் கோபத்திற்கும் அவர்கள் ஆளானார்கள்; இது ஏனென்றால் திடமாகவே அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்தும், அநியாயமாக அவர்கள் நபிமார்களைக் கொலை செய்து வந்ததும்தான். இந்த நிலை அவர்கள் (அல்லாஹ்வுக்குப் பணியாது) மாறு செய்து வந்ததும், (அல்லாஹ் விதித்த) வரம்புகளை மீறிக்கொண்டேயிருந்ததினாலும் ஏற்பட்டது.

2:62 إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالنَّصَارَىٰ وَالصَّابِئِينَ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَهُمْ أَجْرُهُمْ عِندَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ



2:62. ஈமான் கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும் நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களின் (நற்) கூலி நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது; மேலும், அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

2:63 وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّورَ خُذُوا مَا آتَيْنَاكُمْ بِقُوَّةٍ وَاذْكُرُوا مَا فِيهِ لَعَلَّكُمْ تَتَّقُونَ

2:63. இன்னும், நாம் உங்களிடம் வாக்குறுதி வாங்கி, “தூர்” மலையை உங்கள் மேல் உயர்த்தி, “நாம் உங்களுக்கு கொடுத்த (வேதத்)தை உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள்; அதிலுள்ளவற்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (அப்படிச் செய்வீர்களானால்) நீங்கள் பயபக்தியுடையோர் ஆவீர்கள்” (என்று நாம் கூறியதையும் நினைவு கூறுங்கள்).

2:64 ثُمَّ تَوَلَّيْتُمْ مِنْ بَعْدِ ذَٰلِكَ فَلَوْلَا فَضْلُ اللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُ لَكُنْتُمْ مِنَ الْخَاسِرِينَ

2:64. அதன் பின்னும் நீங்கள் (உங்கள் வாக்குறுதியைப்) புறக்கணித்து (மாறி) விட்டீர்கள்; உங்கள் மீது அல்லாஹ்வின் கருணையும் அவன் அருளும் இல்லாவிட்டால் நீங்கள் (முற்றிலும்) நஷ்டவாளிகளாக ஆகியிருப்பீர்கள்.

2:65 وَلَقَدْ عَلِمْتُمُ الَّذِينَ اعْتَدَوْا مِنْكُمْ فِي السَّبْتِ فَقُلْنَا لَهُمْ كُونُوا قِرَدَةً خَاسِئِينَ

2:65. உங்க(ள் முன்னோர்க)ளிலிருந்து சனிக் கிழமையன்று (மீன் பிடிக்கக் கூடாது என்ற) வரம்பை மீறியவர்களைப்பற்றி நீங்கள் உறுதியாக அறிவீர்கள். அதனால் அவர்களை நோக்கி “சிறுமையடைந்த குரங்குகளாகி விடுங்கள்” என்று கூறினோம்.

2:66 فَجَعَلْنَاهَا نَكَالًا لِّمَا بَيْنَ يَدَيْهَا وَمَا خَلْفَهَا وَمَوْعِظَةً لِّلْمُتَّقِينَ

2:66. இன்னும், நாம் இதனை அக்காலத்தில் உள்ளவர்களுக்கும், அதற்குப் பின் வரக்கூடியவர்களுக்கும் படிப்பினையாகவும்; பயபக்தியுடையவர்களுக்கு நல்ல உபதேசமாகவும் ஆக்கினோம்.

2:67 وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَن تَذْبَحُوا بَقَرَةً ۖ قَالُوا أَتَتَّخِذُنَا هُزُوًا ۖ قَالَ
أَعُوذُ بِاللَّهِ أَنْ أَكُونَ مِنَ الْجَاهِلِينَ

2:67. இன்னும் (இதையும் நினைவு கூறுங்கள்) மூஸா தம் சமூகத்தாரிடம், “நீங்கள் ஒரு பசுமாட்டை அறுக்க வேண்டும் என்று நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்” என்று சொன்னபோது, அவர்கள் “(மூஸாவே!) எங்களை பரிகாசத்திற்கு ஆளாக்குகின்றீரா?” என்று கூறினர்; (அப்பொழுது) அவர், “(அப்படிப் பரிகசிக்கும்) அறிவீனர்களில் ஒருவனாக நான் ஆகிவிடாமல் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்” என்று கூறினார்.

2:68 قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا هِيَ ۚ قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ لَّا فَارِضٌ وَلَا بِكْرٌ عَوَانٌ بَيْنَ ذَٰلِكَ ۖ
فَافْعَلُوا مَا تُؤْمَرُونَ

2:68. “அது எத்தகையது என்பதை எங்களுக்கு விளக்கும்படி உம் இறைவனிடம் எங்களுக்காக வேண்டுவீராக!” என்றார்கள். “அப்பசு மாடு அதிகக்

கிழடுமல்ல, கன்றுமல்ல, அவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாகும். எனவே "உங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்" என்று அவன் (அல்லாஹ்) கூறுவதாக" (மூஸா) கூறினார்.

2:69 قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا لَوْنُهَا ۚ قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ صَفْرَاءُ فَاقِعٌ لَّوْنُهَا تَسُرُّ النَّاظِرِينَ

2:69. "அதன் நிறம் யாது!" என்பதை விளக்கும்படி நமக்காக உம் இறைவனை வேண்டுவீராக!" என அவர்கள் கூறினார்கள்; அவர் கூறினார் "திடமாக அது மஞ்சள் நிறமுள்ள பசு மாடு; கெட்டியான நிறம்; பார்ப்பவர்களுக்குப் பரவசம் அளிக்கும் அதன் நிறம் என அ(வ்விறை)வன் அருளினான்" என்று மூஸா கூறினார்.

2:70 قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا هِيَ إِنَّ الْبَقَرَ تَشَابَهَ عَلَيْنَا وَإِنَّا إِن شَاءَ اللَّهُ لَمُهْتَدُونَ

2:70. "உமது இறைவனிடத்தில் எங்களுக்காக பிரார்த்தனை செய்வீராக! அவன் அது எப்படிப்பட்டது என்பதை எங்களுக்கு தெளிவு படுத்துவான். எங்களுக்கு எல்லாப் பசுமாடுகளும் திடனாக ஒரே மாதிரியாகத் தோன்றுகின்றன; அல்லாஹ் நாடினால் நிச்சயமாக நாம் நேர்வழி பெறுவோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

2:71 قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ لَّا ذَلُولٌ تُثِيرُ الْأَرْضَ وَلَا تَسْقِي الْحَرْثَ مُسَلَّمَةٌ لَّا شِيَةَ فِيهَا ۚ قَالُوا الْآنَ جِئْتَ بِالْحَقِّ ۚ فَذَبَحُوهَا وَمَا كَادُوا يَفْعَلُونَ

2:71. அவர் (மூஸா) "நிச்சயமாக அப்பசுமாடு நிலத்தில் உழவடித்தோ, நிலத்திற்கு நீர் பாய்ச்சவோ பயன்படுத்தப்படாதது; ஆரோக்கியமானது; எவ்விதத்திலும் வடுவில்லாதது என்று இறைவன்

தொடரும்.....



தற்போது நிறை வேற்றப்பட்ட இரவு நேர ஊரடங்கானது நடந்து முடிந்த தேர்தல் EVM இயந்திரத்தில் முறைகேடுகள் நிகழ்த்தி பதிவு மாற்றம் நிகழ்ந்து விடுமோ என்பது எதிர்கட்சி அரசியல்வாதிகளுக்கு பயம்.

ஆனால் இரவு நேர ஊரடங்கால் கோடிக்கணக்கான இரவு நேர பணியாளர்கள் பயணமும் தெழிலும் இழந்து வாழ் வாதாரமும் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டு உண்ணும் உணவும் பறிபோய் விடுமோ என்பது அந்த EVM இயந்திரத்தில் வாக்களித்த வாக்களர்களுக்கு வருத்தம்.ஆனால் இரவு நேர ஊரடங்கிற்கு பதில் பகல் நேர ஊரடங்கு நிறைவேற்றப் படாததால் அனைத்து தமிழக மக்களுக்கும் துண்பத்திலும் ஒரு சிறு துளி இன்பம்தான் உறவுகளே....இயந்திரம் உள்நாட்டில் உள்ள மனித வி ஷ கிருமிகளுக்கு பயந்து இராணுவ பாதுகாப்புடன் பத்திரமாகத்தான் பாதுகாக்கப்படுகின்றது.

ஆனால் அதில் வாக்களித்த வாக்காள பொதுமக்கள் தான் கொரோனா வி ஷ கிருமிகளுக்கு பயந்து எந்த ஒரு பாதுகாப்பும் இன்றி வாழ்கின்றனர்.

உயிரற்ற EVM இயந்திரத்திற்கு கிடைக்கும் பாதுகாப்புகள் கூட உயிருள்ள மனிதர்களுக்கு கிடைப்பதில்லை நம் சுதந்திர இந்தியாவில்.

ஆட்சியர்களே!, உயிரற்ற இயந்திரத்திற்கு கொடுக்கும் பாதுகாப்பை கொஞ்சம் உயிருள்ள பொது மக்களுக்கும் கொடுங்கள். அன்புடன், ம.பால்ராஜ்

சர்வதேச தலைமை சமூகசேவகர் **LORDS CLUBS INTERNATIONAL**

**9840559673 | 9790855633** www.lordsclubs.com





# உலகிற்கே சவால் விடும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் பால்ராஜ்




## மக்கள் தொகையில் மட்டுமே முன்னேற்றம் அடைந்த நம் இந்தியா பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி இருப்பதன் காரணம் என்ன?

என்கின்ற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு கேள்வியை உருவாக்கி இதற்கு சரியான பதிலையும் கண்டறிந்து வைத்துக் கொண்டு இவரது டிவிட்டர், முகநூல், வாட்ஸ்அப் குரூப்களுக்கும் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் கேள்வி எழுப்பி வருகின்றார்.
இதற்கு உலகம் முழுவதிலும் இருந்து பொதுமக்களில் ஒரே ஒரு நபர் கூட சரியான பதில் அளிக்கவில்லை என்று தினமும் வருத்தம் தெரிவித்து வருகின்றார்.

ஒட்டு மொத்த இந்தியர்களுக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மிகவும் தேவையான இவரின் இந்த முக்கியக் கேள்விக்கு பொதுமக்களில் யாரும் பதில் அளிக்கத் தெரியாததனால் இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த அரசியல் கட்சித் தலைவர்களும் இந்த கேள்விக்குத் தகுந்த பதில் தெரிகின்றதா என்று பார்ப்போம் என்று இந்தியாவில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் இந்த அறிக்கையின் மூலமாக அறிக்கை விடுகின்றார். இந்தியாவில் உள்ள கட்சித் தலைவர்களில் யாரேனும் ஒருவராவது இதற்கு சரியான பதில் அளித்து விட்டால் அந்தக் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமே வரும் தேர்தளில் முதல்வர் வேட்பாளராக தேர்தளில் போட்டியிடத் தகுதி உடையவர்கள் என்றும் லார்ட்ஸ் ம.பால்ராஜ் அவர்கள் கூறுகின்றார்.

இந்தக் கேள்விக்கு உண்டான பதிலைக் கூறும் கட்சித் தலைவர்கள் மட்டும் தான் முதல்வர் வேட்பாளர் தேர்தலுக்கு உறுதிமொழி வாசித்து தேர்தளில் ரோட்டியிட தகுதி உடையவர்கள் அப்போதுதான் இந்த வேட்பாளர்களால் நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லமுடியும் என்று தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்திற்கு கோரிக்கை விடுகின்றார்.

தேர்தல் ஆணையம் இதை ஏற்குமா? அல்லது அறிவுடைய அரசியல் தலைவர்கள் இவரது கேள்விக்கு பதில் அளித்து தேர்தளில் போட்டியிட தயார் என்று சர்வதசே தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் கேட்கும் கேள்விக்கு ஒற்றை பதிலை கூறிவிட்டு தேர்தளில் போட்டியிட்டு வெற்றி பெற்று பொதுமக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச்செய்வார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

**LORDS CLUBS INTERNATIONAL**
**சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்**
**Head Quarters : INDIA**

**LIONS CLUBS INTERNATIONAL**
**சர்வதேச அரிமாக்கள் சங்கங்கள்**
**Head Quarters : AMERICA**

**ROTARY CLUBS INTERNATIONAL**
**சர்வதேச ரோட்டரி சங்கங்கள்**
**Head Quarters : UNITED KINGDOM**

INTERNATIONAL NEWS

லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

அயல்நாட்டு கிளப்புகளான லயன்ஸ் ரோட்டரி போன்ற சர்வதேச கிளப்புகளில் இந்தியாவில் உள்ள உறுப்பினர்கள் இந்தியர்களின் காலாச்சாரத்தை சீரழிக்கும் வகையில் ஒன்று கூடி வரம்பு மீறிய மது அருந்துதல் அவர்களின் குடும்பத்தாருடன் கலந்துகொள்ளும் அனைத்து பொதுக்கூட்டங்களிலும் புகுத்துகின்றனர்.

இதனால் அதிக மதுபோதையில் தாம் என்ன செய்கின்றோம் என்று தன்னையும் அறியாமல் வரம்பு மீறி மாற்றான் மனைவியை கூட தவறான கண்ணோட்டத்தில் பார்க்கும் தவறான எண்ணமும் சிலருக்கு ஏற்படுகின்றது. இதனால் சிலரின் மனைவியை அவர்களின் கணவரை விட்டு பிரித்து வசப்படுத்தி கள்ளத்தனமாய் இழுத்துக் கொண்டு ஓடியும் விடுகின்றனர்.

மேலும் சிலர் இந்தியாவில் இருந்து அயல்நாடுகளுக்குச் சுற்றுலா சென்று அங்குள்ள அயல்நாட்டுப் பாலியல் தொழில் செய்யும் பெண்களுடன் தவறாக உல்லாசம் கண்டு அவர்களிடமிருந்து எச்ஐவி போன்ற பல்வேறு பால்வினை நோய் தாக்குதலுக்கும் ஆளாகியும் நோயுடன் நம் இந்தியாவிற்கு நாடு திரும்புவதும் உண்டு.

அதிக மது அருந்தி தவறான பாதையில் செல்லும் இவர்களால் ஆரோக்கியத்துடனும் நீண்டகால ஆயுளுடனும் வாழ முடிவதில்லை. இது ஒருபுறம் இருக்க மாற்றொரு புறம் நம் இந்தியாவின் பணத்தை அயல்நாடுகளுக்கு இவர்கள் வாழ்நாள் முழுவதும் ஆண்டுசந்தாவாக அதிகமாக அள்ளிக் கொடுப்பதையும் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவில் நிகழ்த்தியும் இந்தியர்களின் கலாச்சாரத்தை சீர் கெடுத்தும் வருகின்றனர் இதனால் நம் இந்தியர்களின் பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு மிகவும் குறைந்து கொண்டே வருவதுடன் பெருமளவு வீழ்ச்சி அடைவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாகும்.

அயல்நாட்டு கலாச்சாரத்தை இந்தியாவிற்குள் புகுத்திய அயல்நாடுகளின் சர்வதேச கிளப்புகளுக்கு **இந்தியாவில் முற்றுப்புள்ளி வைத்து மாற்று** கிளப்புகளை ஏற்படுத்தி மது இன்றி சேவையுடனும் ஆன்மிகத்துடனும் மதுவிற்கு பதில் மதசார்பற்ற தியானத்தை புகுத்தியும் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியர்களின் களாச்சாரத்தை பேனிக்காப்பதற்காக இந்தியாவில் எனது தலைமையில் அரசு அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டது தான் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் என்னும் பன்னாட்டு சேவை கிளப்ஸ் ஆகும்.

இதில் அனைவரும் அதிக ஆரோக்கியத்துடனும், நீண்ட கால ஆயுளுடனும் வாழச்செய்யவும் இந்தியர்களுக்கும் அயல்நாட்டு மக்களுக்கும் நம் இந்தியர்களின் கலாச்சாரத்தைப் புகுத்தி அனைவரையும் நல்வழிபடுத்தி ஒற்றுமையுடன் அவர்கள் குடும்பத்தாருடன் நீண்ட கால ஆயுளுடனும் ஒற்றுமையுடனும் மன மகிழ்ச்சியுடனும் வாழவைக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் உருவாக்கபட்டுள்ளது. இதில் உலகம் முழுவதும் உள்ள லயன்ஸ் மற்றும் ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரும் லார்ட்ஸ் உறுப்பினர்களாக மாற்றப்பட்டு நல்வழியில் மாற்றத்தை ஏற்படுத்தி அனைவரும் பயனடைந்து நீண்ட ஆயுளுடன் நீடுழி வாழையடி வாழையாய் வாழச்செய்து ஏழை எளிய பொதுமக்களுக்கு அனைத்துவகையான பொதுசேவைகளையும் அறம் செய்திடவேண்டியும் இந்தியர்களின் அனைவரது பொருளாதாரத்தையும் வளர்ச்சியடையச் செய்திடவேண்டும் என்றும் இருகரங்கள் கூப்பி வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன் என்று உலகமெங்கும் உள்ள அமெரிக்காவைச் சார்ந்த லயன்ஸ் கிளப்ஸ் உறுப்பினர்களுக்கும் மற்றும் யு.கே. வை சார்ந்த ரோட்டரி கிளப்ஸ் உறுப்பினர்களுகள் அனைவருக்கும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் உலக தலைவர் லார்ட்ஸ் ம.பால்ராஜ் உருவாக்கி தொண்டு செய்து வரும் இவரது லார்ட்ஸ் கிளப்ஸ்களில் உலகெங்கும் உள்ள அனைவரும் இணைந்து பயனடைந்திட வேண்டுமாய் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளார்.



LORDS CLUBS INTERNATIONAL
Govt. Reg. No. : 1359 / 2013

We Serve

Lords மா.பால்ராஜ்
Founder & International President
LORDS CLUBS INTERNATIONAL

- Economic development
- Education Service
- Friendship
- Health service
- Human rights
- Leadership
- Political Service
- Social service
- Spirituality

For Membership Call
98 4055 9673

LORDS CLUBS INTERNATIONAL
Email : lordsclubsinternational@gmail.com
Web : www.lordsclubs.com

INTERNATIONAL NEWS



# LORDS Ma. PAUL RAJ, Founder & INTERNATIONAL PRESIDENT OF LORDS CLUBS INTERNATIONAL, IS ONE OF THE MOST SUCCESSFUL SOCIAL SERVICE PROVIDERS IN THE WORLD

International social workers help individuals, families, groups, neighborhoods, and communities around the world overcome the challenges they face, such as poverty, substance abuse, or even after a natural disaster.

However, finding international social work positions can be difficult because organizations need candidates that can help people overcome the specific obstacles facing citizens around the world.

Continue reading to find out about the regions that need social workers, a list of issues facing their citizens, and some organizations you could work for.
What Is International Social Work?

Social workers are committed to making a difference in the lives of people within communities. Therefore, international social workers diligently strive to ease suffering and better the lives of people in need around the world.
But that doesn't mean social workers do all of the work themselves.
Instead, social work is about helping those in need to discover new and innovative ways to resolve or cope with the challenges they face. That way, their clients have the skills, knowledge, and empowerment to improve their circumstances and overall life.

Lords Paul Raj, Founder & International President of Lord's Clubs International, is one of the most successful social service providers in the world.